Judicial Form No. 53
(Sec Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, KRISHNAGIRI.

Calendar .. ..
Miscellaneous .. ..
Preliminary Register .. ..
Sessions .. ..

CC. No. 185 of 2016
PW - 5
Time 04.20 PM – 04.29 PM

Name : புருசோத்தமன்
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

(Accused Present).

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act X of 1969 (Central Act 44 of 1969 on the day 20th day of May 2025.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது உத்தனப்பள்ளி காவல் நிலையத்தில் தலைமை காவலர் 159 ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் 2016 ம் வருடம் கிருஷ்ணகிரி ஆயுதப்படையில் காவலராக பணிபுரிந்து ஆயுதப்படை குடியிருப்பில் குடியிருந்து வந்தேன். அப்போது கடந்த 04.04.2016 ம் தேதி காலை 05.00 மணிக்கு ஒசூர் போக்குவரத்து பிரிவில் பணியாற்றி வரும் காவல் உதவி ஆய்வாளர் பார்த்தீபன் இரவு 11.00 மணிக்கு அவருடைய பல்சர் இருசக்கர வாகனம் பதிவு எண் TN 30 AL 5724 என்ற வாகனத்தை அவர் வீட்டின் முன்பு நிறுத்தி வைத்திருந்தது காணவில்லை என்று சொன்னார். பின் நானும் காவல் உதவி ஆய்வாளரும், விஜயலிங்கமும் அக்கம் பக்கம் தேடி பார்த்தோம். பின் வண்டி கிடைக்கவில்லை என்று 07.04.2016 ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் பார்த்தீபன் தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் அளித்தார். 08.04.2016 ம் தேதி காலை 07.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து எங்களிடம் கையொப்பம் வாங்கினார். என்னுடன் சேர்ந்து காவலர்

விஜயலிங்கம் கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். ( **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. வாகனம் காணாமல் போனதாக மட்டும் தான் கூறியுள்ளேன் யார் களவு செய்தார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Sd/D.Saravanan,
Judicial Magistrate No.II,
Krishnagiri.